## ஆந்திர ரயில் விபத்து பலி 14 ஆக அதிகரிப்பு; இரு ரயில்களிலும் 'கவச்' இல்லை என தகவல்



விபத்துப் பகுதியில் நடைபெறும் சீரமைப்புப் பணிகள்.

**விஜயநகரம்:** ஆந்திர மாநிலம் விஜயநகரத்தில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட ரயில் விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது. இதனை கிழக்கு கடற்கரை ரயில்வே உறுதி செய்துள்ளது. இந்நிலையில், விபத்தில் சிக்கிக் கொண்ட இரண்டு ரயில்களிலுமே 'கவச்' பாதுகாப்பு அமைப்பு இல்லை என்பது தெரியவந்துள்ளது. இதனை ரயில்வே கோட்ட மேலாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையில், விபத்தில் காயமடைந்தவர்களை முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி விஜயநகர் அரசுப் பொது மருத்துவமனையில் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். முன்னதாக அவர் விபத்துப் பகுதிக்குத்தான் செல்வதாக இருந்தது. ஆனால், அந்தப் பகுதியில் ரயில்வே பாதையை சீரமைக்கும் பணி துரிதமாக நடைபெற்றுவருவதால் தான் அங்கு செல்வதால் வேலை தடைபடலாம் எனக் கருதி அவர் மருத்துவமனைக்குச் சென்றதாக முதல்வர் அலுவலகம் தகவல் தெரிவித்துள்ளது.

**கவச் என்றால் என்ன?** - கடந்த 2022-ஆம் ஆண்டு மார்ச் 23-ஆம் தேதி ரயில்வே அமைச்சகம் ரயில்கள் பாதுகாப்புக்காக முழுக்க முழுக்க இந்தியாவில் உருவாக்கப்பட்ட தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பான 'கவச்'-ஐ அறிவித்தது. இதற்காக மத்திய அரசின் ரிசேர்ச் டிசைன்ஸ் அண்ட் ஸ்டாண்டர்ட்ஸ் ஆர்கனைசேஷனுக்கு மூன்று இந்திய நிறுவனங்கள் இதனை உருவாக்கிக் கொடுக்க, இந்திய ரயில்வே அதனை பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தது. கவச் என்ற சொல் கவசம் - பாதுகாப்பு என்பதைக் குறிப்பதாகும்.

கவச் தொழில்நுட்பமானது லோக்கோ பைலட்டுகள் என்றழைக்கப்படும் ரயில் ஓட்டுநர்களுக்கு விபத்து குறித்து எச்சரிக்கை செய்யும். எஸ்பிஏடி, சிக்னல் பாஸிங் அட் டேஞ்சர் எனப்படும் இந்த சமிக்ஞையானது ஒரே மார்க்கத்தில் இரு ரயில்கள் வந்தால் எச்சரிக்கும். மிகுந்த அடர்த்தியான பனிமூட்டம் இருக்கும்போது எதிரே ரயில் வந்தால் அலர்ட் செய்யும். எச்சரிக்கை செய்வதோடு மட்டுமல்லாமல், இது தானாகவே பிரேக் அப்ளை செய்து ரயிலின் வேகத்தை மட்டுப்படுத்தி விபத்துக்கான சாத்தியத்தை குறைக்கும்.

**இரு ரயில்களிலும் இல்லை:** இந்நிலையில், ஆந்திராவில் விபத்துக்குள்ளான இரு ரயில்களிலும் கவச் தொழில்நுட்பம் இல்லை என்று ரயில்வே கோட்ட மேலாளர் (DRM) 'தி இந்து' ஆங்கில நாளிதழுக்கு அளித்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர், பாலசா பயணிகள் ரயிலானது மத்திய லைனில் சென்று கொண்டிருந்தது. அது வேகத்தைக் கட்டுப்படுத்தியிருந்தது. அந்த நேரத்தில் ராயகடா பயணிகள் ரயில் சிக்னலைக் கடந்து பின்னால் இருந்து பலாசா ரயில் மீது மோதியுள்ளது. இதில் பலாசா ரயிலின் மூன்று பெட்டிகளும் இன்ஜினும் ராயகடா ரயிலின் இரண்டு பெட்டிகளும் சேதமடைந்தன. இந்த ரயில் தடம் சென்னை - கொல்கத்தா ரயில் செல்வதற்கான முக்கியப் பாதை என்பதால் அந்தப் பாதையை சீரமைப்பதில் அதிகாரிகள் தீவிர முனைப்பு காட்டி வருகின்றனர்" என்றார்.

ஒடிசாவில் கடந்த ஜூன் மாதம் மிக மோசமான ரயில் விபத்து நடந்தது. மூன்று ரயில்கள் மோதிக் கொண்ட் விபத்தில் 260-க்கும் மேற்பட்ட உயிர்கள் பறிபோயின. 900-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கடந்த 30 ஆண்டுகளில் நடந்த 3 மிக மோசமான ரயில் விபத்துகளில் ஒன்றாக ஒடிசா ரயில் விபத்து கருதப்படுகிறது. இந்த ரயில் விபத்து நடந்த பகுதியில், ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாமல் தடுக்கும் 'கவச்' (Kavach) என்ற தொழில்நுட்பம் இல்லை என்ற தகவல் வெளியாகி சர்ச்சையானது. அப்போதே பல தரப்பிலிருந்தும் ரயில்வேயில் கவச் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது பற்றி கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இந்நிலையில், நேற்று நடந்த விபத்தில் சிக்கிய இரண்டு ரயில்களிலுமே கவச் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

**ஹெல்ப்லைன் எண்கள்:** இந்நிலையில், ரயில் விபத்து பற்றி விவரம் அறிய கண்டகப்பள்ளி (8978081960), விஜயநகரம் ( 08922-221206, 08922-221202, 9493589157), ஸ்ரீகாகுளம் சாலை (08942-286213, 286245) என மூன்று இடங்களில் உதவி எண்கள் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் விஜயநகரம், ஸ்ரீகாகுளம் மற்றும் பலாசா ரயில் நிலையங்களில் உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**உதவிக்கு வந்த உள்ளூர்வாசிகள்:** ரயில் விபத்து நடந்த சில நிமிடங்களில் கண்டகப்பள்ளி, அலமண்டா, கோத்தவாசலா பகுதிகளில் இருந்து பொது மக்கள் சம்பவ இடத்துக்கு வந்தனர். முதலில் அவர்கள் ரயில் தடம் புரண்டதாக மட்டுமே நினைத்து வந்துள்ளனர். ஆனால், விபத்தின் தீவிரத்தைப் பார்த்த பின்னர் அப்பகுதி வாசிகள் தண்ணீர், பால், உணவுப் பொட்டலங்கள் எனத் தங்களால் இயன்றதை எடுத்துக் கொண்டு விபத்துப் பகுதிக்கு வந்து உதவிக்கரம் நீட்டியுள்ளனர். சிலர் தங்களின் செல்போன்களைக் கொடுத்து பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் உறவினர்களுக்குத் தகவல் சொல்ல உதவியுள்ளனர். அதேபோல் மீட்புப் பணிகளிலும் உள்ளூர்வாசிகள் உதவியதாக மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## தகுதிநீக்க விவகாரம்: டிச.31-க்குள் முடிவெடுக்க மகாராஷ்டிர சபாநாயகருக்கு உச்ச நீதிமன்றம் கெடு


மகாராஷ்டிர சபாநாயகர் ராகுல் நார்வேகர் | கோப்புப்படம்

**புதுடெல்லி:** முதல்வர் ஏக்நாத் ஷிண்டே உள்ளிட்ட பிற சிவசேனா எம்எல்ஏக்கள் மீதான தகுதிநீக்க விவகாரத்தில் டிசம்பர் 31-ம் தேதிக்குள் முடிவெடுக்க வேண்டும் என்று மகாராஷ்டிர சபாநாயகர் ராகுல் நார்வேகருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேபோல், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் அணி, துணை முதல்வர் அஜித் பவார் அவரது ஆதரவு எம்எல்ஏக்களுக்கு எதிராக தாக்கல் செய்யதுள்ள தகுதி நீங்க மனுக்கள் மீது 2024 ஜனவரி 31-ம் தேதிக்குள் முடிவெடுக்க வேண்டும் என்றும், மக்களவைத் தேர்தல் விரைவில் நடக்க இருக்கும் நிலையில், இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, அரசியல் அமைப்பின் பத்தாவது அட்டவணை (விலகலைத் தடுத்தல்) குறித்து கவனத்தை ஈர்த்து, "நாங்கள் கவலைப்படுகிறோம். பத்தாவது அட்டவணையின்

மாண்பு காப்பாற்றப்பட வேண்டும். நடைமுறைச் சண்டைகள் காரணமாக மனுக்களைத் தாமதப்படுத்த முடியாது. டிசம்பர் 31-ம் தேதி நடைமுறைகளை முடித்துவிட்டு நாங்கள் உத்தரவுகளைப் பிறப்பிப்போம்" என்று தெரிவித்தது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, இந்த மனுக்கள் மீது முடிவு எடுப்பதற்கான நியாயமான காலக்கெடுவை நிர்ணயிக்கும்படி ராகுல் நார்வேகருக்கு இறுதி அவகாசம் வழங்கி இருந்த உச்ச நீதிமன்றம் விரைவாக செயல்பட வேண்டும் என்றும் எச்சரித்திருந்தது.

முன்னதாக, செப்.18ம் தேதி இந்த வழக்கு விசாரணையின்போது, மே 11 உத்தரவுக்கு மரியாதை அளிக்குமாறு கூறிய உச்ச நீதிமன்றம், சிவசேனா எம்எல்ஏக்களின் தகுதி நீக்க விவகாரத்தில் நியாயமான நேரத்துக்குள் முடிவெடுக்க வலியுறுத்தியிருந்தது. அப்போது, சபாநாயரிடம் மே 11-ம் தேதி தகுதி நீக்க வழக்கில் நியாயமான காலத்துக்குள் முடிவெடுக்க கூறியதாகவும், அதன் பின்னர் ஜூலையில் எம்எல்ஏக்களுக்கு நோட்டீஸ் அனுப்பியதைத் தவிர வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்கது.

**பின்னணி:** மகாராஷ்டிராவில் 2019-ல் பேரவைத் தேர்தல் நடைபெற்றது. அப்போது தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் கட்சியுடன், சிவசேனா மகா விகாஸ் அகாடி என்ற பெயரில் கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடித்தது. முதல்வராக சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே பதவியேற்றுக் கொண்டார். இந்த கூட்டணி ஆட்சி இரண்டரை ஆண்டு நீடித்தது. இந்நிலையில், கடந்த ஆண்டு சிவசேனா கட்சி 2-ஆக உடைந்தது. ஏக்நாத் ஷிண்டே தலைமையில் 40-க்கும் அதிகமான எம்எல்ஏக்கள் பாஜகவுக்கு ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து கூட்டணி ஆட்சி கவிழ்ந்தது. உத்தவ் தாக்கரே முதல்வர்

பதவியை ராஜினாமா செய்தார். அதன்பிறகு மகாராஷ்டிராவில் பாஜக – சிவசேனா (ஏக்நாத் ஷிண்டே பிரிவு) கூட்டணி ஆட்சி அமைந்தது. ஏக்நாத் ஷிண்டே முதல்வராகவும், பாஜகவின் தேவேந்திர பட்னாவிஸ் துணை முதல்வராகவும் செயல்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான அணிதான் உண்மையான சிவசேனா என்று தேர்தல் ஆணையம் அண்மையில் அறிவித்தது. மேலும் கட்சியின் அம்பு சின்னம், சிவசேனாவின் பெயரை ஏக்நாத் ஷிண்டே அணிக்கு தேர்தல் ஆணையம் வழங்கியது.

முன்னதாக, ஒருங்கிணைந்த சிவசேனாவின் கொறடாவாக இருந்த எம்எல்ஏ சுனில் பிரபு, ஏக்நாத் ஷிண்டே உள்பட 16 பேரை தகுதி நீக்கம் செய்ய சபாநாயகர் ராகுல் நார்வேகரிடம் கடிதம் வழங்கியிருந்தார். அதேபோல் ஷிண்டே தரப்பு உத்தவ் தாக்கரே அணியின் எம்எல்ஏக்களை தகுதி நீக்கம் செய்ய கடிதம் வழங்கியது. ஆனால் சபாநாயகர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனைத் தொடர்ந்து உத்தவ் தாக்கரே தரப்பினர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது.

## நாட்டின் முன்னேற்றத்தில் இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்க ‘மேரா யுவ பாரத்’ இணையதளம் தொடக்கம்: பிரதமர் மோடி அறிவிப்பு


பிரதமர் மோடி | கோப்புப்படம்

**புதுடெல்லி:** ‘‘நாட்டின் முன்னேற்றத்துக்கான பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க இளைஞர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக நாடு தழுவிய அளவில் ‘மேரா யுவ பாரத்’ இணையதளம் சர்தார் வல்லபபாய் படேல் பிறந்த நாளான அக்டோபர் 31-ம் தேதி தொடங்கப்படும்’’ என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

கடந்த 2014-ம் ஆண்டு நாட்டின் பிரதமராக மோடி பதவியேற்றார். அதன்பிறகு அதே ஆண்டு அக்டோபர் 3-ம் தேதி ‘மனதின் குரல்’ (மன் கி பாத்) என்ற வானொலி நிகழ்ச்சியை பிரதமர் மோடி தொடங்கி வைத்து உரையாற்றினார். அதன்பின் மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் மனதின் குரல் நிகழ்ச்சியில் காலை 11 மணிக்கு நாட்டு மக்களிடம் பிரதமர் மோடி தொடர்ந்து உரையாற்றி வருகிறார். அதன்படி, நேற்று வானொலியில் 106-வது மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றத்தில் இளைஞர்களுக்கு வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். அதற்காக ‘மேரா யுவ பாரத்’ என்ற தனி இணையதளம் தொடங்கப்பட உள்ளது. இளைஞர்கள் MYBharat.Gov.in என்ற இணைய முகவரியில்

சென்று பதிவு செய்து கொள்ள வேண்டும். நாட்டை கட்டி எழுப்புவதற்கான பல்வேறு நிகழ்ச்சிகளில் இந்திய இளைஞர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதாக இந்த இணையதளம் செயல்படும். இந்தியாவை வளர்ந்த நாடாக கட்டியெழுப்புவதற்கான முயற்சியில் இளைஞர்களின் சக்தியை ஒருங்கிணைக்கும் தனி முயற்சி இது.

மேலும், ஏற்கெனவே நான் பல முறை வலியுறுத்தியது போல இந்த முறையும் பண்டிகைகளின் போது உள்ளூர் மக்களின் உற்பத்தி பொருட்களுக்கு மக்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். அவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். தற்சார்பு இந்தியா என்ற கனவை நனவாக்க நாம் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். இந்தியா இன்று உலகின் மிக முக்கியமான உற்பத்தி மையமாக மாறியிருக்கிறது. மக்கள் சுற்றுலா அல்லாது ஆன்மீக யாத்திரை செல்லும் போது உள்ளூர் மக்களின் கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட அவர்களது தயாரிப்புகளை வாங்க வேண்டும். காதி விற்பனை இப்போது முன்னெப்போதும் இல்லாத சாதனை படைத்துள்ளது வரவேற்கத்தக்கது. மகாத்மா காந்தியின் சுயசார்பு என்ற கொள்கைக்கு உதாரணமாக காதி திகழ்கிறது.

கடந்த காலங்களில் 30 ஆயிரம் கோடிக்கு மட்டுமே விற்பனையான காதி பொருட்கள் இந்த மாதம் ரூ.1.25 லட்சம் கோடிக்கு விற்பனை ஆகியுள்ளது.

நவம்பர் 15-ம் தேதி பழங்குடிகள் பெருமை தினத்தைக் கொண்டாட இருக்கிறோம். இந்த தினம் மகான் பிர்சா முண்டாவின் பிறந்த நாளுடன் தொடர்புடையது. பிர்சா முண்டா நமது அனைவரின் இதயங்களிலும் வாழ்கிறார். உண்மையான துணிச்சல் என்றால் என்ன என்பதையும், தான் கொண்ட உறுதியில் ஒருவர் எவ்வாறு உறுதியாக நிற்பது என்பதையும் நாம் பிர்சா முண்டாவின் வாழ்வில் இருந்து கற்றுக் கொள்ளலாம்.

அக்டோபர் 31-ம் தேதி முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவு நாள். அவருக்கு அஞ்சலி செலுத்துகிறேன். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## தமிழக எழுத்தாளர்கள் பெருமாள், சிவசங்கரிக்கு பிரதமர் மோடி பாராட்டு

நமது இலக்கியம், ''ஒரே பாரதம் உன்னத பாரதம்'' என்ற உணர்வை சொல்லும் மிகச் சிறப்பான ஊடகங்களில் ஒன்றாகும். இந்த நேரத்தில் தமிழ்மொழியின் புகழ்பெற்ற எழுத்தாளர் சகோதரி சிவசங்கரி 'Knit India, Through Literature' என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். இலக்கியம் வாயிலாக இந்த நாட்டை ஒரிழையில் கோர்ப்பதுதான் இந்த செயல்திட்டம். இதுதொடர்பாக அவர் கடந்த 16 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். இந்த திட்டம் வாயிலாக 18 பாரத நாட்டு மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியங்களை எழுத்தாளர் சிவசங்கரி மொழியாக்கம் செய்திருக்கிறார். இவருடைய இந்த உறுதிப்பாட்டு சக்தி குறித்து எனக்குப் பெருமையாக இருக்கிறது.

அதேபோல் கன்னியாகுமரியின் ஏ.கே.பெருமாள், தமிழ்நாட்டின் கதைசொல்லும் பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கும் போற்றத்தக்க பணியைச் செய்திருக்கிறார். கடந்த 40 ஆண்டுகளாக நாட்டுப்புற கலை வடிவங்களைத் தேடித் தேடி,தனது புத்தகத்தில் இடம்பெறச் செய்கிறார். இவர் இதுவரை, கிட்டத்தட்ட 100 புத்தகங்களை எழுதியிருப்பது ஆச்சரியத்தை அளிக்கலாம். சிவசங்கரி, ஏ.கே.பெருமாள்ஆகிய இருவரின் முயற்சிகள் ஒவ்வொருவருக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவன. இது தேசத்தின் பெயரை, ஓங்கச் செய்யும். இவ்வாறு பிரதமர் தெரிவித்தார்.

## கேரளாவின் கொச்சி அடுத்த களமசேரியில் பயங்கரம்: கிறிஸ்தவ ஜெபக் கூட்டத்தில் குண்டுவெடிப்பு



கேரளாவின் கொச்சி அடுத்த களமசேரியில் உள்ள சாம்ரா மையத்தில் நேற்று நடந்த ஜெபக் கூட்டத்தில் குண்டுகள் வெடித்ததில் 2 பேர் உயிரிழந்தனர். குண்டுவெடிப்பு நடந்த மையத்தின் முன்பு திரண்ட பொதுமக்கள். படம்: பிடிஐ

**கொச்சி:** கேரளாவின் கொச்சி அடுத்த களமசேரியில் உள்ள கிறிஸ்தவ ஜெபக் கூட்டத்தில் அடுத்தடுத்து 3 குண்டுகள் வெடித்ததில் 2 பெண்கள் உயிரிழந்தனர். 52-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இதில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டம் கொச்சி அடுத்த களமசேரியில் சாம்ரா சர்வதேச மையம் உள்ளது. இங்கு, கிறிஸ்தவர்களின் ஒரு பிரிவான 'யெகோவாவின் சாட்சிகள்' சபை சார்பில் 3 நாட்கள் ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டது. கடந்த 27, 28-ம் தேதிகளில் காலை முதல்மாலை வரை நடைபெற்ற ஜெபக்கூட்டத்தில் 2,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். நிறைவு நாளானநேற்று 2,400-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணிக்கு ஜெபக் கூட்டம் தொடங்கியது. அடுத்த சில நிமிடங்களில் கூட்டத்தின் மையப்பகுதியில் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்துச் சிதறியது.

சிறிது நேரத்தில், கூட்டத்தின் வலது, இடதுபக்கங்களில் 2 குண்டுகள் வெடித்தன. இதில் லிபினா என்ற பெண், சம்பவ இடத்திலேயே உடல் கருகிஉயிரிழந்தார். 52-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

ஜெபக் கூட்டம் தொடங்கியதும், மையத்தின் கதவுகள் உட்புறமாக பூட்டப்பட்டிருந்தன. இதனால், குண்டுவெடிப்பு சம்பவம் நடந்ததும், மக்கள் எப்படி தப்பிப்பது என தெரியாமல், நாலாபுறமும் சிதறி ஓடினர். இதனால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கியும் பலர் காயமடைந்தனர்.

தகவல் கிடைத்து, காவல் துறையினர், மீட்பு குழுவினர் விரைந்துவந்தனர். காயமடைந்தவர்கள்உடனடியாக களமசேரியில் உள்ளஅரசு மருத்துவமனை, கொச்சிமருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

படுகாயமடைந்த 52 பேரில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அவசர சிகிச்சை பிரிவில்அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி குமாரி (53) என்பவர் உயிரிழந்தார்.

கேரள டிஜிபி ஷேக் தர்வேஷ் சாகிப், உளவுத் துறை தலைவர் மனோஜ் ஆபிரகாம் ஆகியோர் சம்பவ இடத்தை நேரில் ஆய்வு செய்தனர். பிறகு, டிஜிபி ஷேக் தர்வேஷ் கூறியதாவது:

களமசேரியில் ஐஇடி வகை குண்டுகள் வெடித்திருப்பது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த வழக்கை விசாரிக்க சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 3 நாட்களின் சிசிடிவி கேமரா பதிவுகளை தீவிரமாக ஆய்வு செய்து வருகிறோம்.

அனைத்து கோணங்களிலும் விசாரணை நடத்தி வருகிறோம். குண்டுவெடிப்புக்கு காரணமானவர்களை கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சூழலில், வெறுப்புணர்வை தூண்டும்பதிவுகளை சமூக வலைதளங்களில் யாரும் வெளியிட கூடாது. அவ்வாறுஅவதூறு பதிவு வெளியிடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**என்ஐஏ, என்எஸ்ஜி ஆய்வு:** தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ), தேசிய பாதுகாப்பு படை (என்எஸ்ஜி), கேரள தீவிரவாத தடுப்பு பிரிவு அதிகாரிகளும் சம்பவ இடத்தை ஆய்வு செய்தனர்.

கேரள சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் கூறியபோது, ‘‘குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு தேவையான அனைத்துஉதவிகளையும் மாநில அரசு வழங்கும். அரசு மருத்துவர்களின் விடுப்புரத்து செய்யப்பட்டு அனைவரும் பணிக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்’’ என்றார்.

குண்டுவெடிப்பு குறித்து கேரளபோலீஸ் வட்டாரங்கள் கூறியதாவது:

களமசேரி ஜெபக் கூட்டத்தின் மத்திய பகுதி, வலது, இடது புறங்களில் டிபன்பாக்ஸ்களில் ஐஇடிவகை குண்டுகளை மறைத்து வைத்து வெடிக்கச் செய்துள்ளனர்.

**‘பொய்யை பரப்பியதால் தாக்குதல்’ - சரணடைந்தவர் வாக்குமூலம்: ரிமோட் மூலம் வெடிக்கச் செய்தார்**

ஜெபக் கூட்டத்தில் குண்டுவெடிப்பு நடந்ததை தொடர்ந்து, கொச்சி பகுதியை சேர்ந்த டோமினிக் மார்ட்டின் (52) என்பவர் கொடைகாரா காவல் நிலையத்தில் சரணடைந்தார். அவர் அளித்த வாக்குமூலத்தில், ‘‘யெகோவாவின் சாட்சிகள் சபையில் கடந்த 16 ஆண்டு களாக உறுப்பினராக இருக்கிறேன். சபை

உறுப்பினர்கள், மதக் கொள்கையில் இருந்து விலகிசென்ற தால், அவர்களது ஜெபக் கூட்டத்தில் குண்டு வைத்தேன்'' என்று தெரிவித்துள்ளார்.

''கொள்கை, கோட்பாடுகளில் இருந்து விலகி, சதிகார சபையாக மாறி, பொய்யை பரப்பி வருகின்றனர். இதை தடுப்பதற்காகவே குண்டுகளை வெடிக்கச் செய்தேன்'' என்று, முன்னதாக சமூக வலைதளத்தில் நேரலை வீடியோ பதிவையும் அவர் வெளியிட்டுள்ளார். ஆனால், ''டோமினிக் எங்கள் சபையை சேர்ந்தவர் அல்ல. அவர் யாரென்றே தெரியாது'' என யெகோவாவின் சாட்சிகள் சபை நிர்வாகிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

EVA STALIN IAS ACADEMY